## 1. கிராம நிர்வாகம்

❖ நில உரிமையில் நிகழும் மாற்றங்களை உரிய பதிவேடுகளில் பதிந்து பராமரிப்பவர் யார்?
கிராம நிர்வாக அலுவலர்

❖ தமிழகத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?
12,506

❖ மக்களின் நேரடித் தொடர்பிற்குட்பட்ட இன்றியமையாதத் துறையாக இயங்குவது எது?
வருவாய் நிர்வாகத் துறை

❖ வருவாய் நிர்வாகத்துறை யாருடைய தலைமையின் கீழ் இயங்குகிறது?
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்

❖ பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணித்தல் போன்ற பணிகள் யாரால் கவனிக்கப்படுகின்றன?
வருவாய் நிர்வாகத் துறையினரால்

❖ வருவாய் நிர்வாகத்துறை எப்போது வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது?
27.05.2003

❖ வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என பெயர் மாற்றத்திற்கான அரசு ஆணை நிலை எண் என்ன?
அரசு ஆணை நிலை எண் 249

❖ மாவட்ட அளவில் நிலம் சம்மந்தமான பணிகளைக் கவனிக்கும் முதன்மை அதிகாரி யார்?
மாவட்ட ஆட்சியர்

❖ முதியோர் உதவித்தொகை எத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது?
வருவாய் நிர்வாகத்துறை

❖ வருவாய்த் துறை அதிகாரிகள் யாருடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளனர்?
மக்களிடம்

❖ மாவட்ட நிர்வாகத்திற்கு முதுகெலும்பாக திகழும் அமைப்பு எது?
கிராம நிர்வாக அமைப்பு

❖ பகுநேர கிராம முன்சீப், கர்ணம் ஆகிய கிராம அலுவலர்கள் எதற்கு முன் பணியாற்றினர்?
14.11.1980க்கு முன்பு

❖ முந்தைய கிராம நிர்வாக முறையில் அரசுக்கு வரவேண்டிய இனங்களை வசூல் செய்தல் கிராம சட்ட ஒழுங்கு பாதுகாப்பு எந்த வரன்முறைபடி செயல்பட்டது?
Regulation 11 of 1816 & Regulation 4 of 1821

❖ முந்தைய கிராம நிர்வாக முறையில் குற்றங்கள் குறித்து காவல்துறைக்கு தகவல் கொடுக்கும் அதிகாரம் எந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ளது?
Section 45 of CRPC

❖ முந்தைய கிராம நிர்வாக முறையில் Section 45 of CRPC-படி எவ்வளவு ரூபாய் மதிப்பிற்குட்பட்ட சொத்து வழக்குகளைப் பைசல் செய்ய முடியும்?
ரூ 50/-

❖ முந்தைய கிராம நிர்வாக முறையில் எச்சட்டப்படி வழங்குகளை பைசல் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டது?
Act-1 of 1889

❖ பிறப்பு இறப்புப் பதிவு செய்யும் அதிகாரம் எந்த சட்டத்தின்படி வழங்கப்பட்டது?
Act-III of 1899

❖ Cattle Trespass Act-I எந்த ஆண்டு கொண்டு வரப்பட்டது?
1871

❖ Treasure Trove Act- 6 எந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்டது?
1878

❖ முந்தைய கிராம நிர்வாக முறையில் வருவாய் அதிகாரிகள் வேறு யாராகவும் இருந்து கிராமத்தின் பொது நிர்வாகத்தைக் கவனித்தனர்?
கிராம பொது நிர்வாக அதிகாரிகளாக

❖ முந்தைய கிராம நிர்வாக முறையில் பாசன வசதிகளைப் பாதுகாத்தும் நீர்பாய்ச்சல் ஆதாரங்களை ஒழுங்குபடுத்தியும் வந்தவர்கள் யார்?
நீர்கட்டிகள்

❖ முந்தைய கிராம நிர்வாக முறையில் வெட்டியான், தலையாரிகள் யாருக்கு உதவியாக இருந்தார்கள்?
கிராமக் கர்ணம்

❖ கிராம நிர்வாக அமைப்பு எந்த ஆண்டு மாற்றம் செய்யப்பட்டது?
1980

❖ பகுதிநேர கிராம அலுவலர் ஒழிப்பு அவசர சட்டத்தின் எண் யாது?
10/80

❖ பகுதிநேர கிராம அலுவலர்கள் ஒழிப்பு அவசரச்

சட்டம் யாரால் பிரகடனப்படுத்தப்பட்டது?
தமிழக ஆளுநரால்

- ❖ பகுதிநேரகிராம அலுவலர்கள் ஒழிப்பு அவசரச் சட்டம் என்று பிரகடனப்படுத்தப்பட்டது?
13.11.1980
- ❖ பகுதிநேர கிராம அலுவலர் ஒழிப்பு அவசரச் சட்டம் எப்பொழுது முதல் நடைமுறைக்கு வந்தது?
14.11.1980
- ❖ பகுதி நேர கிராம அலுவலர்கள் ஒழிப்புச் சட்டம் எண்........ன்படி அப்பதவிகள் ஒழிக்கப்பட்டன?
3/81
- ❖ பகுதி நேர கிராம அலுவலர்களுக்குப் பதிலாக முழுநேர கிராம நிர்வாக அலுவலர்கள் வருவாய் கிராமங்களில் மாநில அளவில் எத்தனைப் பேர் நியமிக்க முடிவு செய்யப்பட்டது?
12,506
- ❖ கிராம நிர்வாக அலுவலர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் கட்டுப்பாட்டிற்கு எப்போது வந்தது?
12.12.1980
- ❖ எந்த அரசு ஆணையின்படி கிராம நிர்வாகப் பணி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் கட்டுப்பாட்டில் வந்தது?
அரசு ஆணை எண் 2747
- ❖ கிராம நிர்வாக அலுவலர்களின் கல்வி தகுதியாக அரசு நிர்ணயம் செய்த தகுதி யாது?
எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி
- ❖ கிராம நிர்வாக அலுவலர்கள் S.S.L.C தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று கூறும் அரசு ஆணை எண் யாது?
அரசு ஆணை எண் - 1287
- ❖ கிராமத் தலையாரி வெட்டியான் மற்றும் நீர்கட்டி போன்றோர் எப்போது நிரந்தர பணியமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு கிராம உதவியாளர்கள் என்ற பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன?
6.7.1995
- ❖ கிராம உதவியாளர்கள் என்ற பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது?
1995ல்
- ❖ அரசு ஆணை எண் 521 எது பற்றியது?
கிராம உதவியாளர் பணி வரையறை
- ❖ கிராம உதவியாளர்களின் பணி எப்போது வரையறுக்கப்பட்டது?
17.6.1998-ல்
- ❖ கிராம நிர்வாக அலுவலர்கள் எங்கு தங்கிப் பணியாற்ற வேண்டும்?
பொறுப்புக் கிராமத்தில்
- ❖ கிராமக் கணக்குகளை எங்கு வைத்துப் பராமரிக்க வேண்டும்?
கிராம நிர்வாக அலுவலரின் அலுவலக கட்டிடத்தில்
- ❖ பயிராய்வு எப்போது செய்ய வேண்டும்?
ஒவ்வொரு மாதமும்
- ❖ பயிராய்வுகளை எதில் குறிக்க வேண்டும்?
அடங்கலில் உரிய குறிப்புகளை ஏற்படுத்தி
- ❖ பிறப்பு இறப்புக் கணக்குப் பராமரிப்பது யாருடைய பணி?
கிராம நிர்வாக அலுவலர்
- ❖ கிராம நிர்வாக அலுவலர் வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த விபரங்களை யாருக்கு அளிக்க வேண்டும்?
வட்டாட்சியர்
- ❖ கிராம நிர்வாக அலுவலர் நாட்குறிப்பு பராமரிக்க வேண்டும் எனக் கூறும் அரசு ஆணை எண் யாது?
அரசு ஆணை எண் 212 (29.4.1999)
- ❖ கிராம அலுவலர்களுக்கான புதிய கட்டிடம் எந்த ஆணைப்படி கட்டப்பட்டது?
அரசு கடித எண் 7 (1)/19628/03,
நாள் : 10-11-2003
- ❖ கிராம நிர்வாக அலுவலர் அவருடைய அலுவலகத்தில் கட்டாயமாக இருக்க வேண்டிய நேரம் என்ன?
காலை 10.00 மணிமுதல் 12 மணி வரை
- ❖ கிராம நிர்வாக அலுவலர்கள் பணி மற்றும் கடமைகள் பற்றிய அரசாணை எது?
எண் 581 நாள் (3-4-1987)

TT STUDY MATERIALS www.tnpsctamil.in

## கிராம நிர்வாக அலுவலர்கள் பணிகள் மற்றும் கடமைகள்

❖ பொதுமக்களுக்கு கூட்டுறவு சங்கங்களில் கடன் பெற சிட்டா மற்றும் அடங்கல் நகல் வழங்குபவர் யார்?
கிராம நிர்வாக அலுவலர்

❖ இருப்புப்பாதை கண்காணிப்பிற்கு யார் ஏற்பாடு செய்ய வேண்டும்?
கிராம நிர்வாக அலுவலர்

❖ கிராம ஊழியர்களின் சம்பளப் பட்டியலை தயாரிக்கும் பொறுப்பு யாருடையது?
கிராம நிர்வாக அலுவலர்

❖ கால்நடைச் சாவடிகளின் கணக்கு யாரால் பராமரிக்கப்படுகிறது?
கிராம நிர்வாக அலுவலர்

❖ கிராம அதிகாரியின் மிக முக்கியமான கடமை எது?
நில ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பது மற்றும் மேல் அலுவலர்களுக்கு தெரிவித்து உடனடி நடவடிக்கை எடுப்பது.

❖ கிராமத்தில் நிகழும் சமூக விரோதச் செயல் குறித்த அறிக்கையைத் தயாரிப்பவர் யார்?
கிராம நிர்வாக அலுவலர்

❖ கிராமத்திற்கு வரும் சந்தேகத்திற்கிடமான நபர்களைக் கண்காணிப்பவர் யார்?
கிராம நிர்வாக அலுவலர்

❖ சட்டம் ஒழுங்கைப் பேண முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கிராம நிர்வாக அலுவலர் என்ன செய்ய வேண்டும்?
கிராம அளவில் அமைதிக் குழுவைக் கூட்ட வேண்டும்

❖ பாசன ஆதாரங்களைக் கண்காணிக்கும் பணி யாருடையது?
கிராம நிர்வாக அலுவலர்

❖ கிராம அளவில் எத்தனை வருடங்களுக்கு விற்பனை புள்ளி விபர பதிவேட்டை கிராம நிர்வாக அலுவலர் பராமரிக்க வேண்டும்?
மூன்று வருடங்களுக்கு

❖ கிராம நிர்வாக அலுவலர் மனுநீதி நாள் நிகழ்ச்சி நடத்த யாருடன் ஒத்துழைக்க வேண்டும்?
வட்டாட்சியருடன்

❖ பதிவு மாற்றம் (Transfer of Registry) சம்மந்தப்பட்ட ஆவணங்களை எதுவரை பாரமரிக்கப்பட வேண்டும்?
நாளது வரை

❖ எந்த ஆணையின்படி நாட்குறிப்பு கிராம நிர்வாக அலுவலர் தயாரித்து வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்?
அரசு ஆணை எண் 212 (நாள்: 29.4.1999)

❖ எந்த ஆண்டிலிருந்து நாட்குறிப்பு தயாரிக்கும் பணி கிராம நிர்வாக அலுவலருக்குக் கொடுக்கப்பட்டது?
29.4.1999

❖ கிராம நிர்வாக அலுவலர் தயாரித்த நாட்குறிப்பை யாருக்கு அனுப்ப வேண்டும்?
வட்டாட்சியருக்கு

❖ கிராம கணக்குகள் எந்தக் கணக்குகளுடன் சரி பார்க்கப்படும்?
வட்டக் கணக்குகளுடன்

❖ எவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை கிராம அளவில் கடன் பதிவேடு சரிபார்க்கப்படும்?
காலாண்டிற்கு ஒரு முறை

❖ கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் பட்டியலைத் தயாரிப்பவர் யார்?
கிராம நிர்வாக அலுவலர்

❖ கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் பட்டியலை தயாரித்து கிராம நிர்வாக அலுவலர் யாருக்கு அனுப்ப வேண்டும்?
வருவாய் அலுவலர்கள் மற்றும் காவல் துறையினருக்கு

## கிராம நிர்வாக அலுவலர்கள் பணி விதிகள்

- வருவாய்த்துறையில் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான நியமனம் எவ்வகை நியமனம்?
  நேரடி நியமனம்
- கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான நியமன அலுவலர் யார்?
  வருவாய் கோட்ட அலுவலர்
- சென்னை மாவட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான நியமன அலுவலர் யார்?
  சென்னை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)
- கிராம நிர்வாக அலுவலரின் பணி நியமனத்தில் இட ஒதுக்கீடு எந்த விதியின்படி மேற்கொள்ளப்படுகிறது?
  பொது விதி 22
- கிராம நிர்வாக அலுவலர் நேரடி நியமனத்திற்கு வயது வரம்பு என்ன?
  21 வயது நிறைவு (ஜுலை மாதம் முதல் நாளன்று)
- கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு எந்த வயதிற்கு மேற்பட்டவர் தகுதியற்றவராவர்?
  30 வயது முடிவுற்றவர்
- பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு அல்லது அட்டவணை வகுப்பு மற்றும் பழங்குடி இனத்தை சார்ந்த நபர்களைப் பொறுத்த மட்டில் அதிகபட்ச வயது வரம்பு எவ்வளவு?
  40 ஆண்டுகள்
- கிராம நிர்வாக அலுவலர் பணிக்கு குறைந்தபட்சக் கல்வித்தகுதி பற்றிய விதி என்ன?
  விதி 12 (அ) ( 1 ) மற்றும் பகுதி இரண்டு
- கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான பிணைத் தொகை எவ்வளவு?
  ரூ 2000/-
- கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான பிணைத் தொகையை எத்தனை மாதத்திற்குள் அளிக்க வேண்டும்?
  பணியில் சேர்ந்த 1 மாதத்திற்குள்
- கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் அளிக்க வேண்டிய பிணைத் தொகை எவ்வளவு?
  ரூ 1000/-
- கிராம நிர்வாக பதவிக்கு அட்டவணை வகுப்பு மற்றும் பழங்குடியினருக்கான பிணைத்தொகை எவ்வளவு?
  பிணைத்தொகை அளிக்க வேண்டியதில்லை
- கிராம நிர்வாக அலுவலருக்கான பிணைத் தொகை எவ்வாறு செலுத்த வேண்டும்?
  அஞ்சல் அலுவலகத்தில் வைப்புத் தொகையாக
- கிராம நிர்வாக அலுவலருக்கான பிணைத் தொகை எப்பொழுது விடுவிக்கப்படும்?
  பணி ஓய்வு, ராஜினாமா, பணிநீக்கம் சமயங்களில்
- கிராம நிர்வாக அலுவலருக்கான பிணைத் தொகையை விடுவிக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது?
  மாவட்ட ஆட்சியர்
- கிராம நிர்வாக அலுவலர் பணியில் சேருபவர் எத்தனை ஆண்டுகளுக்குத் தகுதி காண் பருவத்தில் இருக்க வேண்டும்?
  பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியான மூன்று ஆண்டு காலத்திற்குள் இரண்டு வருடம் தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும்.
- கிராம நிர்வாக அலுவலருக்கு நில அளவைப் பயிற்சி எவ்வளவு காலத்திற்கு குறையாமல் அளிக்கப்படும்?
  ஒரு மாதத்திற்கும் குறையாமல்
- கிராம நிர்வாக அலுவலருக்கான நில அளவைப் பயிற்சி யாரால் அளிக்கப்படும்?
  நில அளவைத்துறையால்
- நேரடி தெரிவு மூலம் நியமிக்கப்படும் கிராம நிர்வாக அலுவலர்கள் நில அளவை பயிற்சி முடிவில் என்ன செய்ய வேண்டும்?
  நடத்தப்படும் நில அளவை பயிற்சித் தேர்வில் வெற்றி பெற வேண்டும்
- முதல் முறை நில அளவை பயிற்சியில் தேராதவர் என்ன செய்ய வேண்டும்?
  மீண்டும் பயிற்சி பெற்று தேர்வு எழுத வேண்டும்
- நில அளவைப் பயிற்சியில் இரண்டாவது முறையிலும் தேர்ச்சி பெறாதவர் என்ன செய்ய வேண்டும்?
  சம்பளம் மற்றும் இதர படிகள் வழங்கப்படாத விடுப்பை எடுத்துக் கொண்டு மூன்றாவது முறையாக நில அளவைப் பயிற்சி மற்றும் தேர்வில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.
- நில அளவை பயிற்சித் தேர்வு எழுத எத்தனை முறை வாய்ப்பு அளிக்கப்படும்?
  3 முறை
- மூன்றாவது முறை நில அளவை பயிற்சியில்

TT STUDY MATERIALS www.tnpsctamil.in

தவறுபவர் நிலை என்ன?
பணியிலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவார்

- ✤ நில அளவைப் பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர் எப்பயிற்சி அளிக்கப்படும்?
  கிராம நிர்வாகப் பயிற்சி
- ✤ கிராம நிர்வாகப் பயிற்சி பெறும் காலம் எவ்வளவு?
  ஆறு வாரங்களுக்கு குறையாமல்
- ✤ இரண்டாம், மூன்றாம் முறை பயிற்சி எந்த விதிக்குட்பட்டு பயிற்சி பெற வேண்டும்?
  துணை விதி (i)
- ✤ கிராம நிர்வாகப் பயிற்சியில் மூன்றாம் முறையும் தேர்ச்சி பெறாதவர் என்ன செய்யப்படுவார்?
  உடனடியாக பணியிலிருந்து வெளியேற்றப்படுவார்
- ✤ எந்த விதியின்படி குறைந்தபட்ச வீட்டு வாடகைப்படி உள்ளிட்ட தகுதியுள்ளபடிகள் அளிக்கப்படும்?
  துணை விதி அ (i) மற்றும் அ (ii)
- ✤ பயிற்சி காலம் எதற்கான கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும்?
  தகுதிகாண் பருவம் மற்றும் ஊதிய உயர்வுக்கு
- ✤ பயிற்சியில் தேர்ச்சி பெறாதவர் எவற்றை ஒப்படைக்க வேண்டும்?
  பயிற்சி காலத்தில் பெற்ற சம்பளம் மற்றும் படிகள் மற்றும் பயிற்சிக்குண்டான செலவு
- ✤ பயிற்சியில் தேர்ச்சி பெறாதவர் பயிற்சி காலத்தில் பெற்ற சம்பளம் மற்றும் படியினை எவ்வாறு அளிக்க வேண்டும்?
  அரசுக் கணக்கில் செலுத்த (ஈடு செய்ய) வேண்டும்.
- ✤ எச்சட்டப்படி சம்பளம் மற்றும் படிகள் மற்றும் பயிற்சிக்குண்டான செலவு திரும்ப வசூலிக்கப்படுகிறது?
  1864 தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டம் (1864ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் II)
- ✤ வசூலிக்கப்படும் தொகை எவ்வாராக கருதப்பட்டு வசூலிக்கப்படும்?
  நிலவரி பாக்கியாக கருதி
- ✤ தகுதிகாண் பருவத்திற்குள் எந்தெந்தத் தேர்வுகளில் கிராம நிர்வாக அலுவலர் தேர்ச்சி பெற வேண்டும்?
  அ) கிராம நிர்வாக அலுவலர்களின் அதிகாரங்களும் கடமைகளும்
  ஆ) கிராம சுகாதாரம்
  இ) கிராமக் கணக்குகள் நடைமுறை நூல்
- ✤ கிராம நிர்வாக அலுவலரை மாவட்டத்திற்கு வெளியே எதற்காகப் பணி மாற்றம் செய்யப்படலாம்?
  நிர்வாகக் காரணங்களுக்காக
- ✤ கிராம நிர்வாக அலுவலரைக் கோட்டத்திற்குள் பணியிட மாற்றம் செய்பவர் யார்?
  கோட்டாட்சியர்
- ✤ கிராம நிர்வாக அலுவலரை மாவட்டத்திற்குள் பணியிட மாற்றம் செய்பவர் யார்?
  மாவட்ட ஆட்சியர்
- ✤ கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு நியமிக்கப்படும் ஒவ்வொருவரும் எங்கு குடியிருக்க வேண்டும்?
  அவரது பொறுப்பு கிராமத்தில்
- ✤ கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு நியமிக்கப்படும் தமிழ்மொழி தவிர்த்து பிற மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட கிராம நிர்வாக அலுவலர் எந்தத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்?
  இரண்டாம் நிலை தமிழ் மொழித் தேர்வு
- ✤ தமிழைத் தவிர பிற மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட புதிதாக நியமனம் செய்யப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் எத்தனை ஆண்டுகளுக்குள் இரண்டாம் நிலை தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்?
  இரண்டு ஆண்டுகளுக்குள்
- ✤ இரண்டாம் நிலை தமிழ் மொழித் தேர்வு யாரால் நடத்தப்படும்?
  அரசு பணியாளர் தேர்வாணைக்குழு **(TNPSC)**
- ✤ இரண்டாம் நிலை தமிழ் மொழித் தேர்வில் வெற்றி பெறாதவர் என்ன செய்யப்படுவார்?
  எவ்வித முன்னறிவிப்பின்றி பணியிலிருந்து விடுவிக்கப்படுவார்.
- ✤ கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் எந்தெந்த விதிகள் பொருந்தும்?
  அரசுப் பணியாளர் நடத்தை விதிமுறைகள், அடிப்படை விதிகள், ஓய்வூதிய விதிகள் மற்றும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதிகள்.